DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Assistant Sessions Judge, Gingee

| | |
|---|---|
| Sessions | **SC Case No. 42/2017** |
| Deposition of Witness for | Prosecution<br>Defence<br>Court |
| Name | **PW 27 Rajiv** |
| Father's Name/ Husband name | Ravichandiran |
| Village | Villupuram |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969. On 23.06.2023

( A1 Present A2 to A5 absent. U/S317 Crpc Petition filed and allowed.)

**முதல் விசாரணை**

நான் தற்போது விழுப்புரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் அறிவியல் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.06.2016 அன்று பணியில் இருந்த போது வளத்தி காவல் நிலைய குற்ற எண். 156/2016 என்ற வழக்கில் இறந்துபோன ராமன் வயது 74 , என்பவரது உடல் உள்ளுறுப்புகள், மருத்துவ அலுலவர் ஜிப்மர் மருத்துவமனை புதுச்சேரி என்வரிடம் இருந்து பெண் காவலர் 2214 திருமதி .பார்வதி என்பவர் மூலமாக மூடி முத்திரையிடப்பட்ட குப்பிகளில் ஆய்வகத்தில் பெறப்பட்டது. அவை

1. இரைப்படை மற்றும் குடல்
2. கல்லீரல் மற்றும் சிறுநீரகம்
3. இரத்தம்
4. பாதுகாப்பு திரவம் இவை அனைத்தையும் பகுப்பாய்வு செய்தததில் ஆல்கஹால் மற்றும் நச்சுப்பொருட்கள் ஏதுவும் இல்லை என்று கண்டறியப்பட்டது. இதற்கான அறிக்கை எண். VPM Tox. H 887/2016 ஆகும் நாள். 08.07.2016 .என்னிடம் காண்பிக்கப்படும் அறிக்கை தான் நான் வழங்கியது ஆகும். **அது ஏற்கனவே அ.சா.ஆ. 12 ஆக குறியீடு செய்யப்பட்டது**. போலிசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

(**எதிரிகள்தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்**)